# பத்திரிக்கை செய்தி

## பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய ரூ.10,000/- லஞ்சம் கேட்டு பெற்ற கிராம நிர்வாக அதிகாரி கைது

புகார்தாரர் திரு.நிஜாமுதின், வேப்பூர் கிராமம், குடியாத்தம் தாலுக்கா, வேலூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய வேண்டி வேப்பூர் கிராமத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.கோபிநாத், கிராம நிர்வாக அதிகாரி, வேப்பூர் கிராமம், வேலூர் அவர்கள் தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை வேலூர் மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 18.03.2025 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.கோபிநாத், கிராம நிர்வாக அதிகாரி, லஞ்ச பணம் ரூ.10,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.